**தலைப்பு 214 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

---

## 1. தூரநோக்கு, பணிகள் மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப, நாட்டின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு அதிநவீன பல்கலைக்கழக அமைப்பை உருவாக்குவதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கமாகும்.

### 1.2 பணிகள்

உயர் கல்வியில் ஆர்வமுள்ள கட்சிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகளுக்கேற்ப கல்விக் கற்கை நெறிகளை வேறுபடுத்துதல், நியமங்களையும் அவற்றின் தரத்தையும் பராமரித்தல் மற்றும் உகந்த கற்பித்தலுக்கான பொருத்தத்தை உறுதி செய்தல், ஆராய்ச்சிகளை நடாத்திப் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் உயர்கல்வி முறையை உலகளாவிய சேவைகளில் ஈடுபடும் சிறப்பான மையங்களின் வலையமைப்பாக மாற்றுவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல், நாட்டின் தேவைகளுக்குப் பொருத்தமான உயர்ந்த மட்டத்திலான கற்றலை வளர்த்தல் மற்றும் / அல்லது அதற்கான வசதிகளைச் செய்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களை நடாத்துவதும் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் வகையில் அர்ப்பணித்தலும், உயர் அங்கீகாரம் மற்றும் அதிக இடவசதிகளைக் கொண்டதான உயர் கல்வி முறைமை, தேவையான வளங்களை ஒதுக்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதலின் மூலம் நல்லாட்சி மற்றும் நிர்வாகத்தை நிறுவுதல், அபிவிருத்தியினைப் பேணிச் செல்லல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிகள் ஆகும்.

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## 2. மொத்த ஒதுக்கம் மற்றும் செலவு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மொத்த தேறிய ஒதுக்கம் ரூபா 59,041,100,000 என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அவற்றில் ரூபா 59,001,451,000 மட்டுமே பகிரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஒதுக்கத்தில் ரூபா 39,649,000 அதாவது நூற்றுக்கு 0.07 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**2020 திசெம்பர் 31 திகதியில்**

| செலவு | தேறிய ஒதுக்கம் | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய ஒதுக்கத்தின் நூற்றுவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழும் | 49,496,500,000 | 49,456,921,000 | 39,579,000 | 0.08 |
| மூலதன | 9,544,600,000 | 9,544,530,000 | 70,000 | 0.0007 |
| மொத்தம் | 59,041,100,000 | 59,001,451,000 | 39,649,000 | 0.07 |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

-------------------------------------------

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் செலவுத் தலைப்புக்களின் கீழ் கணக்கிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிருவனங்களினால் அவ்வொதுக்கங்கள் உபயோகப்படுத்தப் பட்டிருந்தது. அப்பல்கலைக்கழங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் இறுதி கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு அது சம்பந்தமான அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.